**ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)**
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி - 627012
பல்கலைக்கழக மானியக் குழுவின் 2 (எஃப்) & 12 (பி) அங்கீகாரம் மற்றும்
தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின்
மீள்தர மதிப்பீட்டில் “ஏ” தகுதி பெற்றது
(திருப்பராய்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தின் கிளை நிறுவனம்)
அரியகுளம், திருநெல்வேலி – 627011

**தமிழ்த்துறை**
சார்பாக நடைபெற்ற

# தேசியக் கருத்தரங்கம்



திருநெல்வேலி ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி), 14.12.2023 வியாழக்கிழமை அன்று கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா மற்றும் ஆலோசகர் யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்களின் ஆசியுடனும், கல்லூரி இயக்குநர் பேராசிரியர் (மேஜர்) பொ. சந்திரசேகரன் அவர்களின் மேலான வழிகாட்டுதலோடும், ‘**பக்தி இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பெண்கள்**’ என்னும் தலைப்பில் ஒருநாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியை யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, ஆசியுரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் பக்தி இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றி அறிந்து கொள்வது இன்றைய காலகட்டத்தில் அவசியமானதாகும் என்று எடுத்துரைத்தார்கள். தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர் முனைவர் சு. அபிலா சுந்தரி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் ந. கமலா அவர்கள் தலைமையுரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் இறைவன் மீது கொண்ட பக்தியானது சரியான தருணத்தில் சிறப்பினைத் தரும் என்ற கருத்தினை முன்வைத்தார்கள். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. தனலெட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினர்கள் குறித்த அறிமுகவுரை மற்றும் நோக்கவுரையும் வழங்கினார்கள். கேரளா மாநிலம், மூணாறு அரசுக் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் செ. ஞானேஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ‘**பக்தி இலக்கியத்தில் பெண்கள்**’ என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் பக்தி இலக்கியங்கள் பாடிய ஆண்டாள், காரைக்கால் அம்மையார் பற்றிய செய்திகளை எடுத்துக்கூறினார்கள். இரண்டாம் அமர்வில் தூத்துக்குடி, தூய மரியன்னை கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.ம.சோனல் அவர்கள், ‘**ஆண்டாள் போற்றும் இறைநிலை**’ என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் ஆண்டாளின் இறைபக்தியினை விளக்கிக் கூறினார்கள். கருத்தரங்கில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுரையினை வழங்கினார்கள். நிறைவு விழாவில் சான்றிதழ் மற்றும் ஆய்வுரை நூல் வழங்கப்பட்டது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு. அபிலா சுந்தரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். நாட்டுப்பண் மற்றும் சாந்திப் பண்ணோடு விழா இனிதே நிறைவு பெற்றது.